புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

=================================================================================

# சங்க இலக்கியம் உணர்த்தும் பண்பாடு

முனைவர் கு. பத்ம பிரியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

=================================================================================

ஆய்வுச் சுருக்கம்:

சமூக இயல் அறிஞர்களின் கருத்தின்படி, பண்பாடு என்பது, வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். அந்தவகையில் புகழ், வீரம், விருந்தோம்பல், ஈகை, ஒப்புரவு, பொதுநலம் பேணுதல் ஆகிய பண்புகள் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன. சங்க இலக்கியங்கள் உணர்த்தக்கூடிய தமிழர்களின் பண்பாட்டின் அறிந்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை:

இலக்கியம் மக்கள் வாழ்க்கையில் இருந்து மலர்கிறது. எனவே இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. இலக்கியத்தின் பாடுபொருளாக அமைவதும் வாழ்க்கையே. வாழ்க்கை முறையே பண்பாட்டை உணர்த்தும் வாயில். தமிழ்ப் பண்பாட்டின் கூறுகளை இனம் காண்பதற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றாக அமைந்துள்ளன. வாழ்க்கையை நகல் எடுத்துக் காட்டுவது இலக்கியம். இலக்கியம் அது படைக்கப்படும் காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டையும் எடுத்துரைக்கும். அதற்குத் தமிழ் இலக்கியங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தமிழகத்தில் ஒரு நீண்ட நெடிய தமிழ் இலக்கிய மரபு இருந்திருக்கிறது என்பதற்குச் சான்றாய்த் திகழ்பவை சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்களைப் படைத்த புலவர்கள், தாம் வாழ்ந்த சூழலை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டியுள்ளனர். ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள், அவர்களின் நம்பிக்கைகள், வாழ்க்கை முறை ஆகியவற்றைத் தாம் இயற்றிய இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர். பண்பாட்டினை உணர்த்த வல்ல இலக்கியங்களே மனித சமுதாயத்திற்குப் பயன்தரும் இலக்கியங்களாகும். இந்த அளவுகோல் கொண்டு நந்தமிழ் மொழியில் எழுந்துள்ள செந்தமிழ் இலக்கியங்களைச் செவ்விதின் நோக்கினால் அவை பண்பாட்டினைப் பார்க்கப் பேசும் பனுவல்களாக விளங்கக் காணலாம். ”தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்கொரு குணமுண்டு” என்ற தமிழ்க் கவிஞர் தம் கூற்றுப் படி, பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் பண்பாட்டினைப் பறைசாற்றி நிற்கின்றது என்கிறார் சி. பாலசுப்பிரமணியன். அதனடிப்படையில், சங்க இலக்கியங்களில் உணர்த்தும் பண்பாட்டினை ஆராயலாம்.

## பரந்துபட்ட மனம்:

தொன்றுதொட்டு தமிழர்கள் உலகளாவிய நோக்கும் பரந்துபட்ட மனமும் கொண்டவர்கள். இந்த உலகத்திலுள்ள மானிடர் யாவரும் ஓர் இனமே. அனைவரும் நம்

உறவினர்கள். அவர்கள் வாழும் ஊரும் நமது ஊர்களே என்ற பரந்த மனப்பான்மை உடையவர்களாக வாழ்ந்தனர் என்பதை புறநானூறு எடுத்துரைத்துள்ளது.

"யாதும்ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம்:192, பக்.464)

பொதுநலப்பண்பு:

இந்த உலகத்தில் பல தீமைகள் நிகழ்கின்றன. இதற்குக் காரணம் தன் நலத்திற்காக எத்தகைய தீமைகளையும் செய்யத் துணியும் தீயவர்கள் பலர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த உலகம் இன்னமும் இயங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம் சுயநலம் கருதாத பல நல்லவர்கள் இருக்கின்றார்கள்.

தேவர்கள் உண்டது அமிழ்தம். அந்த அமிழ்தத்தை உண்டால் இறப்பு என்பது இல்லை. அத்தகைய அமிழ்தம் கிடைத்தாலும் சுயநலத்துடன் தாம் மட்டும் உண்ண மாட்டார்கள். எந்தச் சூழலிலும் சினம் கொள்ள மாட்டார்கள். பிறருக்கு நன்மை செய்வார்கள். பழியான ஒன்றைச் செய்வதற்கு உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழியான செயல்களைச் செய்ய மாட்டார்கள். இவ்வாறு பிறருக்காக வாழும் பொதுநலம் படைத்தோர் இருப்பதால்தான் இந்த உலகம் வாழ்கிறது என்பதை கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"உண்டால் அம்ம இவ்வுலகம், இந்திரர்
அமழ்தம் இயைவதாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" (புறம்:182, பக்.442)

இப்பாடலின் வாயிலாக, நம் முன்னோர்கள் எவ்வளவு பெரிய சிறப்புக்குரிய பொருள் கிடைத்தாலும் தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். பொது நலத்திற்காகவே எதையும் செய்வார்கள், செய்ய வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்த பண்பாட்டுச் சிறப்பினை புறநானூற்றின் வழி அறிய முடிகின்றது.

காதல் பண்பாடு:

தலைவன் தலைவி ஒருவர் மீது ஒருவர் அன்புசெலுத்தி காதல் கொள்ளும் போது அவர்களின் பண்பு பாராட்டப்படுவதாயுள்ளது. ஒரு நாள் தலைவி தன் தோழியரோடு சென்று நெய்தலங்கானலின் வெண்மணலில் விடையாடினாள். அப்பொழுது அவ்வெள்ளிய மணலில் புன்னைவிதை ஒன்றை ஊன்றிவிட்டு வந்தாள். தான் வேரூன்றிய புன்னை விதை முளைத்து முளை தோன்றி நிற்பதைப் பின்னொரு நாள் கண்ட தலைவி, அதனை நோக்கி மிகவும் மகிழ்ந்து, நெய் கலந்த இனிய பாலை நீராக வார்த்து இனிமையோடு வளர்த்துவரும் அன்னை அவளை நோக்கி "நீ வளர்த்து வரும் புன்னை நும்மினுஞ் சிறந்த தன்றோ? அது நும்முடன் பிறந்த தங்கையாகும் தகுதியுடையது" என்று புன்னை மரத்தின் சிறப்பினைப் பொருந்த உரைத்தனள். ஆதலால் தன் தங்கையாகிய அப்புன்னை மரத்தின் எதிரில் தலைவனோடு நகைத்து விளையாடி மகிழ்ந்திருப்பதற்குப் பெரிதும் நாணினாள் தலைவி. இவ்வாறு, புன்னையையும் தன் உடன் பிறப்பாக நினைந்து, அதன் எதிரில் தன் நெஞ்சமர் காதலனோடும் பேசுவதற்கு நாணிய தலைவியின் காதற் பண்பாட்டினை நற்றிணைப் பாடல் வழி அறியமுடிகின்றது.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தன்று நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினாள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுகம் நும்மொடு நகையே"

(நற்றிணை:172, 1-6, பக்.315)

இல்லற பண்பாடு:

தலைவன் தலைவியரிடையே வளரும் காதல் நிலை, பின் கற்புக் காலத்தில் இல்லறத்தில் தலைப்படும்பொழுது இல்லறத்திணைச் சீர்மைப்படுத்தும் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது. தலைவி தலைவனுக்காகச் சமையல் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தாள் ''கட்டித் தயிரைத் தன் காந்தள் விரல்களால் பிசைந்து, நெகிழ்ந்த சேலையினையும் அக் கையாலேயே பற்றிச் சரி செய்து கொண்டு குவளைப் போன்ற கண்கள் தாளிப்புப் புகையினைக் கொள்ளவும் வருந்தாது தாளிதம் செய்து தயிர்க்குழம்பு வைத்தாள். கணவன் சாப்பிடும் பொழுது ''இனிது'' எனப் பாராட்டிக் கூறி மகிழ்ந்து உண்டான். இதனைக் கண்ட தலைவியின் முகத்தில் இளநகை தோன்றியது.'' இவ்வாறு இன்பமான இல்லறப் பண்பாட்டினைக் கீழ் வரும் பாடல் உணர்த்துகின்றது.

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇ
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே''

(குறுந்தொகை:167, பக்.386)

இன்பத்தில் யாராலும் பங்கு பெறமுடியும்; துன்பத்தில் பங்கு கொள்வதென்பது பலருக்கு அரிதான ஒரு செயல். ஆயினும் சங்க காலத்து மகளிர் பண்பாடு இதற்கு மாறானது. தலைவி தலைவனின் துன்பத்திற்குத் துணையாக இருப்பதனையே இன்பமாகக் கருதுகின்றாள்.

''………………………………………………………… நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு?'' (பாலைக்கலி: 6: 9-11 பக்.22)

விருந்தோம்பல் பண்பு:

இல்லற வாழ்வில் சிறந்து விளங்குவது விருந்தோம்பல் பண்பாகும். இல்லற வாழ்வின் வெற்றியும், தலைவன் தலைவியை விட்டு பொருள் ஈட்ட செல்வதும் தன்னை நாடி வருபவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதற்காகவே. ''இருந்தோம்பி இல்வாழ்க்கை நடத்துவது, இன்னார் இனியர்'' எனக் கருதாது விருந்தினை இன்முகத்துடன் வரவேற்று உதவிகள் செய்யும் பொருட்டே எனும் தெளிந்த அறிவுடையவர்களாக அன்றைய தமிழர்கள் விளங்கினர்.

பண்டைத் தமிழர் விருந்தோம்பலைச் சிறந்ததோர் அறமாகப் போற்றினர். இதனை அவர்களுடைய அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளில் இருந்து தெளியலாம். சங்கப் பாடல்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றை அழகிய ஓவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன.

ஓர் இல்லத்திற்குப் பசியால் வாடிய சில பெரியோர்கள் சென்றனர். அந்த இல்லத்தரசி அவர்களை அன்போடு வரவேற்றாள். வீட்டில் இருந்த வரகும் தினையும் இரவலரின் பசியைப் போக்கப் பயன்படுத்தியதனால் தீர்ந்துவிட்டன. திருப்பத் தருவதாகக் கடன் வாங்கிச் சென்ற அண்டை அயலாரும் அந்த நேரத்தில் உதவும் நிலையில் இல்லை. இல்லத்தரசி செய்வதறியாது வருத்தமுற்றாள். அடுத்த உழவுக்குப் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்பாக எடுத்து வைக்கப்பட்டுள்ள தினைவிதை வீட்டில் இருக்கும் நினைவு வந்தது. ஆனால் அவ்விதைக்குரிய தினையைச் செலவழித்து விட்டால் அடுத்து விதைவிதைப்பதற்கு ஒரு சிறு மணிகூட வீட்டில் இல்லாமல் போய்விடுமே எனும் எண்ணமும் அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆயினும் அதற்காக அவள் தயங்கவில்லை. பசியுடன் வந்தவருக்குப் பசியைப் போக்குவது தம்முடைய இல்வாழ்க்கையின் கடமை என்பதை அவள் முக்கியமாகக் கருதினாள். உடனே விதைத் தினையை மிகுந்த மகிழ்ச்சியோடு உரலில் இட்டு, குற்றியெடுத்து அவள் உணவு சமைத்தாள். விருந்தினரை உண்பித்து மகிழ்ந்த இல்லறத் தலைவியின் விருந்தோம்பும் பண்பாட்டை புறநானூறு தெற்றென விளக்குகின்றது.

''………………………… மனையோள் விரும்பி
வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென
……………………………………………………………………………
குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து

*சிறிது புறப்பட்டன்றோ இலளே;……….."        (புறம்:333, 8-13, பக்.724)*

*போர் நெறிப் பண்பாடு:*

*சங்க காலத்தில் தமிழகத்தின் வீரயுகமாய் போற்றப்படுகிறது. போர்களத்தில் புகழுக்காக உயிரைக் கொடுக்கும் பண்பு பண்டைத் தமிழரிடம் மேலோங்கி நின்றது. இதனால் வீரமும் காதலும் சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கையில் முதன்மை இடம் பெற்றிருந்தன. பொதுவாக, நாட்டு மக்களுக்கு அல்லல் உண்டாக்கக் கூடாது எனும் நோக்குடையவராக அவர்கள் செயல்பட்டனர். ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போது அந்நாட்டு மக்களுக்கு முன் கூட்டியே தக்க பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு எச்சரிக்கை செய்துள்ளனர். பசுக்கூட்டங்களையும், அறவோர்களையும், பெண்டிரையும் திருமணம் ஆகிய நிலையில் பொன்போல் புதல்வரைப் பெறாதவர்களையும் ''எங்கள் அம்புகள் தாக்கா வண்ணம் உங்களுக்குக் காவலான அரண்களை அடைக'' என்று அறிவுறுத்தும் வழக்கம் படையெடுத்துச் செல்வோரிடம் இருந்தது எனலாம். அறத்தின் வழிப்பட்டதாகத் தங்கள் போர்நெறி அமையவேண்டும் என்ற உயரிய நோக்கோடு அருள் உள்ளத்தோடு இவ்வாறு எச்சரிக்கை செய்தனர் என்பதை, புறநானூறு வழி அறியமுடிகின்றது.*

*''ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்*
*………………………………………………………………………….*
*எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்''  (புறம்:9, 1-8, பக்.25)*

*அடிக்கடி போரில் ஈடுபட்ட சங்ககாலத் தமிழ்மக்கள் அப்போரினை நெறியோடும் முறையோடும் நடத்த வேண்டும் எனும் உறுதிப்பாடு உடையவர்களாக இருந்த பண்பை அறிய முடிகின்றது.*

*அரசியற் பண்பாடு:*

*அரசர்க்கென்றே சில பண்பாட்டு உண்மைகள் புலவர்களால் அந்நாளில் வலியுத்திக் கூறப்பட்டுள்ளன. மக்கட்டு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னனே உயிர் என்பதும், அரசனின் கொற்றம் அறநெறியிற் செலுத்தப்படல் வேண்டும் என்பதும், அவன் தம்மவர் என்று கோல் கோடாமலும் பிறர் என்று குணங்கொல்லாமலும், அருளையும் அன்பையும் நீக்கி நீங்கா நரகம் செல்பவர்களைப் போலில்லாமல் சிறு குழந்தையைக் கவனமாக வளர்ப்பவர் போன்று மென்மையும், மழையைப் போன்று கொடையும், உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதும் புறநானூறு கூறும் அரசியற் பண்பாடாகும். இதனை கீழ் வரும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.*

*''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்*
*அதனால் நமரெனக் கோல்கோடாது''    (புறம்:55, 10-11, பக்.145)*

*''அருளும் அன்பும் நீங்கி நீங்கா*
*நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்*
*குழவி கொள்பவரின் ஓம்புமதி.''          (புறம்:5, 5-7, பக்.14)*

*சங்க இலக்கியங்கள் வாழ்வின் செம்மைப்பாட்டிற்கு இயைந்த முறையில் சிறந்த பண்பாட்டுக் கூறுகளைத் தம்மிடையே பொதிந்து வைத்துள்ளன. ''நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் கவலையில்லை, அந்நாட்டில் உள்ள மக்கள் மனப்பண்பாடு நிறைந்தவர்களானால் அந்நாடு வாழ்ந்துவிடும் என்கிறார் ஔவையார் (புறம்:187, பக்.454)*

*முடிவுரை:*

*பரந்துபட்ட மனமும், பொதுநலப்பண்பும், காதல் பண்பாடும், இல்லற பண்பாடும், விருந்தோம்பல் பண்பும், போர் நெறிப் பண்பாடும், அரசியற் பண்பாடும் எனக் இக்கட்டுரை சங்க இலக்கியங்கள் உணர்த்திய பண்பாட்டை எடுத்தியம்புகின்றது . சங்க இலக்கியங்கள் நல்ல பல பண்பாடுகளை நமக்கு உணர்த்தி, நம் வாழ்வு வளம்பெற்றுச் சிறக்க இன்றளவும் வழிகாட்டி வருகின்றன.*

*துணைநூற்பட்டியல்:*

1. *நாகராசன்.வி.முனைவர்.,(உரை), குறுந்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.*

2. பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), நற்றிணை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
3. பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), புறநானூறு (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
4. பாலசுப்பிரமணியன். கு. வெ. முனைவர்., (உரை), கலித்தொகை (மூலமும் உரையும்), ஐந்தாம் பதிப்பு, அக்டோபர். 2014, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98.
5. பாலசுப்பிரமணியன். சி. முனைவர்., காரும் தேரும், ஆறாம் பதிப்பு, நவம்பர். 1984, நறுமலர் பதிப்பகம், சென்னை – 29.

********* ********* ********** ********* ********* ********** ********** **********